Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.90/2021

Depositions of : PW9
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Pandi | வயது | : | |
| தந்தை பெயர் | : | Elumalai | கிராமம் | : | |
| தாலுக்கா | : | | மாவட்டம் | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of April - 2025.

(எதிரிஆஜர்)

<u>முதல் விசாரணை:-</u>

என்னுடைய பெயர் பாண்டி. என்னுடைய தந்தை பெயர் ஏழுமலை. நான் தற்பொழுது எண்.4, 3வது தெரு, நாகம்மன் நகர், திருமுல்லைவாயலில் குடியிருந்து வருகின்றேன். முருகப்பா பாலிடெக்னிக் எதிரில் இளநீர்க்கடை வைத்திருக்கின்றேன். எனக்கு தேதி ஞாபகம் இல்லை. நான் கடையில் இருந்த பொழுது கூட்டமாக நிறையப்பேர் ஓடி வந்தார்கள். நானும் சென்று பார்த்தேன். அங்கு ஒரு நபரை பெட்ரோல் ஊற்றிக் கொளுத்திவிட்டதாகச் சொன்னார்கள். நான் திரும்பிக் கடைக்கு வந்துவிட்டேன். போலிசார் எதிரியைக் கைது செய்ய வேண்டி என்னை சாட்சியாக இருக்கும் படி சொன்னார்கள். அந்த அம்மாவை நான் பார்க்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து மட்டும் என்னுடையது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அறிவார்ந்த அரசுதரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாகக் கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரரைண—

கடந்த 24.11.2019 அன்று சுமார் 2.00 மணியளவில் நான் கடையில் இருந்த பொழுது முருகப்பா பாலிடெக்னிக் பஸ்டாப் அருகில் போலிசார் ஒரு பெண்னை பிடித்து விசாரித்துகொண்டிருந்தார்கள் என்று சொல்லியிருக்கின்றேன் என்றால் சரியல்ல. அது பற்றி எனக்குத் தெரியாது. அப்பொழுது நான் என்னவென்று பார்க்க அருகில் சென்று பார்த்த பொழுது அங்கிருந்த திருமுல்லைவாயல் போலிசார் என்னையும் என் அருகில் நின்றிருந்த ஏழுமலை என்பவரையும் அழைத்து அங்கு பிடித்து வைத்துதிருந்த பெண்ணை காட்டி அவர் ஆஷா ராணி என்றும் அவரை திருமுல்லைவாயல் போலிசார் கைது செய்திருப்பதாகவும் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்துள்ளதாகவும் அதற்கு சாட்சியமாக இருக்கு படி போலிசார் என்னை கேட்டுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. அப்படி எதுவும் நடக்கவில்லை. பின்பு எங்கள் முன்னிலையில் ஆஷாராணி என்பவர் வாக்குமூலம் அளித்தார் என்றால் சரியல்ல. என்னிடம் கையெழுத்து மட்டும் தான் கேட்டார்கள். போலிஸ் வெங்கடேசன் மீது பெட்ரோலை ஊற்றி கொசுவிற்கு போட்ட நெருப்பை எடுத்து அவர் மீது போட்டு கொளுத்திவிட்டு ஒடிவிட்டேன் என்று ஆஷாராணி சொன்னதாக வாக்குமூலத்தில் உள்ளது என்றால் சரியல்ல. அது பற்றி எனக்குத் தெரியாது. அந்த வாக்மூலத்திற்கு என்னோடு சேர்ந்து ஏழுமலை என்பவரை சாட்சியாக போலிசார் இருக்கசொன்னார்கள் என்றால் சரியல்ல. நான் எதிரியைக் கைது செய்த பொழுதும், எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும் பொழுதும் உடன் இருந்துவிட்டு தற்பொழுது எதிரியைக் காப்பாற்றவேண்டும் என்று தற்பொழுது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை :- இல்லை.